2022 மே 10]

(ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2022), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/ 2022)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21-10-2008 ஆம் ஆண்டு உங்கள் ஆட்சியில் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டு வரப்பட்ட சட்டம். அதுவும் அந்த கூட்டுறவுச் சங்கங்கள் தன்னாட்சி உரிமை பெற்றதாக, முழுமை பெற்றதாக இருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் கொண்டு வரப்பட்ட சட்டம். அந்தச் சட்டத்தை இப்பொழுது மாற்றுவதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் முதலில் கேட்டுக்கொள்கிறேன்.*

நான் என்ன சொல்கிறேன் என்றால், அன்றைக்கு வைத்தியநாதன் கமிட்டியை அமைத்து, உயர் அலுவலர்களைக்கொண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் நலிந்து போயிருக்கின்றன; கூட்டுறவுச் சங்கங்களுக்கு மறு வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில், கலைஞர் அவர்கள் இந்தச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்தார். கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தம் 62/2008-ன்படி, இந்த 3-வது திருத்தச் சட்டத்தின் மூலமாக

@ 9–5–2022 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. செல்லூர் கே. ராஜு] [2022 மே 10

இதை நடைமுறைப்படுத்தி, இதை Assembly-ல் pass செய்ய வைத்து, 21-10-2008 முதல் இயங்கிக் கொண்டிருக்கிறது. அன்றைக்கு இருந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் கொண்டு வருகிறார். சட்ட உட்பிரிவு 136-D(2) என்பது, குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, கடன் பெறுதல், பணி அமைத்தல், பணியாளர் எண்ணிக்கை, உள்கட்டமைப்பு வசதிகளான வட்டி விகிதம் போன்ற இனங்களுக்கு இந்தச் சட்டத்தின்படி தன்னாட்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் ஒரு சங்கம், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்—இப்பொழுது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று.

இப்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களை நீங்கள்தான் 2011-ல் . . . (குறுக்கீடு) இதே கூட்டுறவுத் தேர்தலுக்கு 5 ஆண்டுகள் என்று கொண்டு வந்தீர்கள். (குறுக்கீடு) Parliament-ல் 5 ஆண்டுகள் என்று கொண்டு வந்தார்கள். (குறுக்கீடு) அன்றைக்கு காங்கிரஸ் ஆட்சியை கொண்டு வர வேண்டும் என்று தி.மு.க. ஆட்சி கொண்டு வந்தாலும், (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். முக்கியமானதைத்தான் சொல்கின்றேன். அந்தச் சட்டத்தை இப்போது 3 ஆண்டுகள் என்று கொண்டு வந்தீர்கள். அதையும் constitutional amendment-க்கு எதிராகக் கொண்டு வருகிறீர்கள். நீங்கள் அடுத்த தேர்தலுக்கும் கொண்டு வரலாம்.

அடுத்தது, ஒரு தன்னாட்சி பெற்ற கூட்டுறவுச் சங்கத்தில் அரசு அலுவலர் ஒருவரை நிர்வாகக் குழுவில் உறுப்பினராகப் போடுகிறீர்கள். ஆனால், அவ்வாறு அமைப்பதற்கு சட்டவிதிகளே கிடையாது.

பிற்பகல் 1-25

இன்றைக்கு உலகமே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தன்னாட்சி கொடுக்க வேண்டும், முழுமையான அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நீங்கள் கொண்டு வந்த சட்டத்தை, அன்று டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த சட்டத்தை, இன்று**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றது.

2022 மே 10] [திரு. செல்லூர் கே. ராஜூ]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையில் சில அதிகாரிகள் இருக்கிறார்கள். நான் கடந்த 10 ஆண்டுகளாக இந்தத் துறையில் இருந்திருக்கிறேன். சில அதிகாரிகள் நம்மிடம் என்னவென்றே தெரிவிக்க மாட்டார்கள். அவர்களுடைய ** பார்ப்பார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்வது, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசியது போதும். கலைஞர் அவர்கள் கொண்டு வந்த சட்டம் இருக்கிறது என்று நீங்கள் அழகாகச் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. செல்லூர் கே. ராஜூ: நான் பேசி முடிக்கத்தான் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. செல்லூர் கே. ராஜூ: மாநில சுயாட்சி கேட்கின்ற நீங்கள், மாநில சுயாட்சி கேட்கின்ற இந்த அரசு, திராவிட மாடல் அரசு, இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடைய அதிகாரத்தைக் குறைக்கலாமா? இது நியாயமா? கலைஞர் அவர்கள் கொண்டு வந்த சட்டத்தைத் திருத்தலாமா? இது நியாயமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ** என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. ** கொண்டு வந்தார்கள் என்று சொன்னதெல்லாம் அவைக் குறிப்பில் இடம்பெற வேண்டாம். அந்த வார்த்தைகள் நன்றாக இல்லை. ஆரோக்கியமாக இருக்கும்போது அவையெல்லாம் தேவையில்லை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் கூட்டுறவுச் சங்கங்களிலெல்லாம் சிறப்பாக, நல்ல முறையில் நிர்வாகம் நடைபெற வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முதலில் அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவது, இந்தத் திருத்தம் அரசின் சார்பாக, நாங்கள் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்திருந்தாலும், பேராசிரியர் வைத்தியநாதன் குழுவின் பரிந்துரையின்படி, நபார்டு வங்கியில் கடன் பெறுவதற்காக banks அனைத்தும் தன்னாட்சி பெற்றிருக்க வேண்டுமென்று அந்தக் குழு பரிந்துரை செய்ததன் அடிப்படையில் விதி 136-D(2) என்ற பிரிவைக் கொண்டு வந்தோம். அந்தப் பிரிவில் நிதி மற்றும் உள் நிர்வாகம், அதாவது, financial and internal administrative matters இந்த இரண்டிலும் அந்தச் சங்கத்திற்கு முழுமையான உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதில் பணி நியமனம், கடன் வாங்குதல் ஆகிய அனைத்துமே மொத்தத்தில் அடங்கியிருக்கும்.

ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் என்ன செய்யப்பட்டது என்றால், 2013-ல்தான் Board அமைக்கப்பட்டது. Board அமைக்கப்படுவதற்கு முன்பு, 2008-ல் தி.மு.க. ஆட்சியில் வங்கிகளுக்கு தன்னாட்சி வழங்கியது உண்மைதான். அதில், சில விதிமுறைகளெல்லாம் சேர்க்கப்பட்டபோது, நபார்டு வங்கி ஒரு condition வைத்தது; என்ன condition என்றால், common cadre of service இதில் include ஆகக் கூடாது என்று சொன்னது. அதன்படி, விதி 136-D(2) திருத்தப்பட்டு, 'There shall be no common cadre of service' என்று குறிப்பிட்டு, விதி 136-D(2)-ல் சேர்க்கப்பட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் என்ன செய்தீர்கள்? 2013-ல் நிர்வாகஸ்தர்கள் எல்லோரும் பொறுப்பேற்றுக் கொண்டுவிட்டார்கள். அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, தன்னாட்சியில் பணி நியமனங்களையெல்லாம் அந்தக் கூட்டுறவுக் கடன் சங்கமே செய்ய வேண்டும். அதற்கான முழு அதிகாரம் அந்தச் சங்கத்திற்கே இருக்கிறது. வேலைக்கு salesman நியமிப்பதாக இருந்தாலும் சரி, Secretary-ஐ நியமிப்பதாக இருந்தாலும் சரி, Clerk-ஐ நியமிப்பதாக இருந்தாலும் சரி, அனைத்துமே அந்தச் சங்கத்திற்கு இருக்கக்கூடிய உரிமை. 2016 ஆம் ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சியில் என்ன செய்தீர்கள் என்றால், Recruitment Bureau என்ற அமைப்பைக் கொண்டுவந்தீர்கள். State Recruitment

Bureau, District Recruitment Bureau என்ற அமைப்புகளைக் கொண்டுவந்தீர்கள். 2019-ல் Common Cadre of Service என்ற ஒன்றைக் கொண்டு வந்தீர்கள். கூட்டுறவுக் கடன் சங்கத்தில் இருக்கக்கூடிய செயலர்களையெல்லாம் ஒரு சங்கத்திலிருந்து இன்னொரு சங்கத்திற்கு மாறுதல் செய்வதற்காக இந்த Common Cadre of Service-ஐக் கொண்டுவந்தீர்கள். இந்த முறையைக் கொண்டு வந்தபோது, கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட தன்னாட்சி அதிகாரத்தை, அதாவது விதி 136-D(2)-ல் சொல்லப்பட்டிருக்கக்கூடிய நிதி மற்றும் உள் நிர்வாகம்; அதேபோன்று, விதி 136-D(23)-ல் சொல்லப்பட்டிருக்கின்ற Common Cadre of Service-ஐ சேர்க்க வேண்டுமென்று நபார்டு வங்கி தெரிவித்ததால், அதைச் சேர்த்திருக்கிறோம்.

பிற்பகல் 1-30

அ.தி.மு.க. ஆட்சியில் என்ன செய்தீர்கள் என்றால், அந்த Common Cadre of Service என்பதை மட்டும் strike out செய்து, நீக்கிவிட்டீர்கள். (குறுக்கீடு) அதை நீக்கி ஒரு amendment கொண்டு வந்து, 2019-ல் அரசாணை எண் 14-ஐ பிறப்பித்தீர்கள். அரசாணை எண் 14-ன்படி சங்கம் விட்டு சங்கம் மாறுதல் செய்யலாம் என்ற நடைமுறையைக் கொண்டுவந்தீர்கள். இப்போது உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. உயர் நீதிமன்றத்தில் என்ன வழக்கு இருக்கிறதென்றால், ஒரு சங்கத்திற்குத் தன்னாட்சி இருக்கின்றபோது நிர்வாகம், பணியாளர் நியமனம், மாறுதல் என எல்லாமே அங்கேயே இருக்கலாம் என்றிருக்கிறது. அதுதான் அங்கே தன்னாட்சி. அந்தத் தன்னாட்சியைச் சீர்குலைத்து நீங்கள் கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கக்கூடிய Section 74—ஐ invoke செய்துவிட்டீர்கள். கூட்டுறவுச் சங்கத்தில் Section 75 அதிலே வந்து Common Cadre of Service என்று இருக்கிறது. அதையும் invoke செய்துவிட்டீர்கள். இரண்டையும் invoke செய்து அரசாணை எண் 14-ஐ போட்டீர்கள். அரசாணை 14-ஐ நாங்கள் நீக்குவதா அல்லது 136-D(2)-ஐ நீங்கள் நீக்குகிறீர்களா என்று நீதிமன்ற Bench இப்போது கேட்டிருக்கிறது. இரண்டுக்கும் காரணம் நீங்கள் செய்த தவறுதான். இப்போது நாங்கள் என்ன செய்கிறோமென்றால் . . . (குறுக்கீடு) நான் என்ன கேட்கிறேன் என்றால், குறிப்பாக நீங்கள் நீக்கவில்லையென்றால், என்ன செய்திருக்க வேண்டுமென்றால் 'There shall be no Common Cadre of Service' என்பதை strike out செய்வதற்குப் பதிலாக பிரிவு 136-D sub-section (2)-ல் உள்ள ஷரத்துகள் எல்லாவற்றையும் நீங்கள் நீக்கியிருந்தீர்களென்றால்,

[திரு. இ. பெரியசாமி] [2022 மே 10

இந்த Common Cadre of Service-ஐக் கொண்டு வந்திருக்கலாம். பணியாளர் நியமனம் கொண்டு வந்திருக்கலாம். அதை நீங்கள் செய்யவில்லை. அதனால்தான் நீதிமன்றம் சொல்கிறது. 136-D (2) என்ற அந்தப் பிரிவு நீக்கப்பட வேண்டும்; அப்படியில்லையென்றால் நீங்கள் போட்ட G.O. செல்லாமல் போய்விடும் (குறுக்கீடு) உங்களுக்குத்தான் Sir, நன்மை செய்கிறோம். அதனடிப்படையில்தான், இந்த sub-section-ஐக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) நன்மை உங்களுக்குத்தான் என்று மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்குப்பிறகு என்ன வேண்டும்? (குறுக்கீடு) போதும். ஒரு வார்த்தை சொல்லுங்கள்.

திரு. செல்லூர் கே. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வேறு. நான் சொன்னது வேறு. மாண்புமிகு அமைச்சர் சொன்னது வேறு. நான் Court Judgement பற்றி சொல்லவில்லை. இன்னொன்று என்னவென்றால், சங்கங்களுடைய வளர்ச்சி குறித்து Common Cadre of Service டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்ததுதான். கலைஞர் அவர்கள் கொண்டுவந்ததுதான். நாங்களும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2022 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2022) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு*